**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No. 64/ 2023**

**Dated: 21.07.2026**

Name : **கலைச்செல்வி** (PW1)

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

பிரதிவாதிகள் பேச்சியம்மன் கோவில்பட்டியை சேர்ந்தவர்கள். உசிலம்பட்டியில் இருந்து பேச்சியம்மன் கோவில்பட்டி 7 கி.மீ இருக்கும் என்றால் தெரியாது. பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் கிடையாது. என் சம்மந்தகாரர் சொல்லி தான் பிரதிவாதிகள் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் சரியில்லை. என்னிடம் சுந்தரமூர்த்தி, அன்னலட்சுமி பணம் கேட்டு வந்தார்கள். பணம் கேட்டு வந்த தேதி ஞாபகமில்லை. 10.07.2020ல் கடன் கொடுத்தேன். என் வீட்டில் வந்து கடன் வாங்கி சென்றார்கள். வீட்டில் கடன் வாங்கி கொண்டு புரோநோட்டு எழுதி இருவரும் கையெழுத்து செய்து கொடுத்தார்கள். அன்றைய தினம் மலரும், சுரேந்திரனும் அங்கு இருந்தார்கள். வேறு யாரும் இல்லை என்றால் என் மகன் இருந்தார். இதே நீதிமன்றத்தில் இதற்கு முன்பு புரோநோட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் ஞாபகமில்லை. அதே பேச்சியம்மன் கோவில்பட்டியை சேர்ந்த வெற்றி என்பவர் மீது ரூ.4 லட்சம் பணம் கொடுத்து புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் போட்டிருந்தேன். மேக்கிழார் பட்டியை சேர்ந்த சுசேந்திரன் என்பவர் மீது ரூ.5 லட்சம் புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் செய்தேன். புரோநோட்டில் முதல் கையெழுத்து மலர் போட்டுள்ளார். பிரதிவாதிகள் கொரோனா காலத்தில் என்னிடம் ரூ.50,000/- கடன் வாங்கி அதற்காக எழுதிக்கொடுத்த புரோநோட்டை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை

**தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்லை. அந்த கடன் கூடுதல் வட்டி கேட்டு பிரதிவாதிகள் தரமறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியில்லை. நான் சொன்வாறு சொன்ன தேதியில் பிரதிவாதிகள் என்னிடம் பணம் வாங்க வில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியில்லை.**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.21 10:21:17 +0530

Sub Judge,
Usilampatti.